MCOP.No. 332/2022
Date : 08.10.2025
Pw – 1
பெயர்: நித்யா
க/பெ: சண்முகசுந்தரம்

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

06.02.2021 தேதியில் விபத்து நடைபெற்றது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து நடைபெற்ற அன்று நான் புகார் கொடுத்துவிட்டேன். ஆனால் 14.02.2021 தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். விபத்து நடைபெற்ற 10 நாட்களுக்கு பிறகு எனது கணவர் இறந்துவிட்டார். தாவா விபத்தில் ஒரு வாகனம் மட்டும் சம்மந்தப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். TN55 BW 1470 பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனம் என்னுடைய கணவரின் தம்பி இளவரசன் என்பவருக்கு சொந்தமானதாகும். எனது கணவரின் தகப்பனார் பெயர் வரதராஜன் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டியது எனது கணவர் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன எனது கணவரின் உடற்கூராய்வு எந்த தேதியில் மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. 2ம் எதிர்மனுதாரரான காப்புறுதி நிறுவனம் இந்த வழக்கில் என்ன கட்சி செய்து வருகிறது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ.3 சடலக்கூராய்வு அறிக்கையில் என்ன விபரங்கள் கண்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. ம.சா.ஆ.3 சடலக்கூராய்வு அறிக்கையில் போலிசாரால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் தவறானது என்று நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL OP (MD) No.772/2022 மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் காவல் அலுவலர் குற்ற வழக்கில் மேற்கொண்ட விபரங்கள் அனைத்தும் தவறானது என்று குறிப்பிட்டுதான் மேற்படி பல்வகை மனுவை தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுவின்பேரில் காவல் துணைகண்காணிப்பாளர் மேற்படி குற்ற வழக்கு குறித்து முறையாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி காவல் துணை கண்காணிப்பாளரின் அறிக்கை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி காவல் துணைகண்காணிப்பாளர் தாக்கல் செய்திருந்தஅறிக்கை எனக்கும் ஒரு நகல் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு

தெரியாது. அந்த அறிக்கையின் நகலை நான் பெற்றுக்கொண்டுவிட்டு தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா விபத்தை எனது கணவர்தான் வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக நான் தவறான தகவல் அளித்து அதன்பேரில் எனது கணவர் ஓட்டி சென்ற வாகனம், வாகன தணிகைக்கு உட்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. குற்ற வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை முறையாக தாக்கல் செய்யாமல் நான் வேண்டும் என்றே மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா விபத்து சம்மந்தமாக இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை எனது கணவர் இரவல் வாங்கி சென்று அவரே வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளதால் எனது கணவரின் இறப்புக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எனக்கு ஆதரவாக செயல்பட்டு இந்த வழக்கில் வேண்டுமென்றே ஆஜராகவில்லை என்று சொன்னாலும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– நித்யா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.